

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.2.2026) கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம், பெருமாள்புரத்தில் 7 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் புதிதாக கட்டப்பட்டுள்ள 90 வீடுகளை திறந்து வைத்து, முகாம் தமிழர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்வின்போது, சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு, பால்வளத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் தலைவர் சுரேஷ் ராஜன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ்.ஆஸ்டின், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆர். அழகுமீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (24.2.2026) கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம், பெருமாள்புரத்தில் 7 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் புதிதாக கட்டப்பட்டுள்ள 90 வீடுகள், முகாம் வாழ் தமிழர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வின்போது, சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு, பால்வளத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் தலைவர் சுரேஷ் ராஜன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ்.ஆஸ்டின், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆர். அழகுமீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### 61,521 பேர் வேலைவாய்ப்பு பெறும் வகையில் – ரூ. 31,592 கோடியில்

# 46 முதலீட்டுத் திட்டங்களுக்கு ஒப்புதல்!

### அமைச்சரவைக் கூட்ட முடிவுகள் குறித்து – அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேட்டி!

**சென்னை, பிப்.24–**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (23.2.2026) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற 24வது அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பிறகு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:–**

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இன்று அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் புதிதாக நிறுவப்படவுள்ள மற்றும் விரிவாக்கம் மேற்கொள்ளப்படவுள்ள 46 முதலீட்டுத் திட்டங்களுக்கு, ஊக்க சலுகைகள் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டங்களுக்காக ரூ. 31,592.39 கோடி முதலீடு மேற்கொள்ள உறுதியளிக்கப்பட்டுள்ளதுடன் 61,521 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் மாநிலம் முழுவதும் பரவலாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், தேனி, திண்டுக்கல், கரூர், திருப்பூர், சேலம், கோயம்புத்தூர், தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களில் அமைக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இம்முதலீடுகளில் முக்கியத்துவம் வாய்ந்தவை Sakthi Aircraft Industry நிறுவனத்தின் பயிற்சி விமான உபபாகங்கள் இணைத்



தல் மற்றும் பராமரிப்பு, NMB Minebea எனும் நிறுவனத்தின் பல்வகை செயல்பாடுகளுக்கான செமிகண்டக்டர் உற்பத்தி, Yield Engineering Systems உங்களுக்கு நன்றாக தெரியும். இந்த நிறுவனத்தின் செமிகண்டக்டர் உற்பத்திக்கான சாதனங்கள் தயாரிப்பு, Dixon குழுமத்தின் மின்னணுவியல் சாதனங்கள் உற்பத்தி, SFO Technologies நிறுவனத்தின் மின்னணு உபபாகங்கள் உற்பத்தி, Vikram Solar நிறுவனத்தின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின்கலன் சேமிப்பு அமைப்பு தொகுத்தல், Minerva (Battery Energy Storage System) Minerva Special Purpose Vehicle நிறுவனத்தின் கவச வாகனங்கள் உற்பத்தி;

Hikoki Power Tools மிகப்பெரிய நிறுவனத்தின் மின்னாற்றல் கருவிகள் உற்பத்தி, Festo நிறுவனத்தின் தொழில்துறை தானியக்க சாதனங்கள் உற்பத்தி, மிக முக்கியமான Akers குழுமத்தின் விமான இயந்திரம் மற்றும் Gear Box உபபாகங்களுக்கான உற்பத்தி. இது சிறப்பான ஒன்றாக அமையும். Snider Electric குழுமத்தின் குளிரூட்டப்பட்ட சாதனங்கள் உள்ளிட்ட உற்பத்தி, Bharat Biotech நிறுவனத்தின் உயிர் அறிவியல் தயாரிப்பதற்கான பூங்கா மிகப்பெரிய பிரமாண்டமான ஒரு அறிவிப்பு, மிகவும் முக்கியத்துமான ஒன்றாகவும், உடனடியாக செயல்படுத்தப்படும் என்பதற்கான அத்தாட்சி இது. Caterpillar குழுமத்தின் கட்டுமான இயந்திரங்கள் சாதனங்கள் உற்பத்தி, Boeing நிறுவனத்தின் மேம்பட்ட வான்வெளி ஆராய்ச்சி மேம்பாட்டு மையம்;

Saint Gobain நிறுவனத்தின் கண்ணாடி தயாரிப்புகள் உள்ளிட்ட பல முன்னணி நிறுவனங்கள் பல்வேறு துறைகளைச் சார்ந்த முதலீடுகள் இன்றைய அமைச்சரவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்பதை மிகுந்த பெருமையுடன், மகிழ்ச்சியுடன் திராவிட நாயகன் நமது முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் தமிழ்நாட்டில் எப்படி அனைத்துப் பகுதிகளுக்கும் பரவலாக்கப்பட்ட வளர்ச்சி உறுதிசெய்யப்பட்டு அங்கிருக்கின்ற மக்களுக்கும், ஆங்காங்கே நமது படித்த இளைஞர்களுக்கு அங்கேயே வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வாய்ப்புகளை இந்த அமைச்சரவையின் மூலம் முதலமைச்சர் அவர்கள் உருவாக்கித் தந்துள்ளார்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தமது பேட்டியின் போது குறிப்பிட்டார்.

### 'வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்' கீழ் ரூ.23,57 கோடியில் நவீன சலவை நிலையம் – விளையாட்டுத் திடல்!

# மூலக்கொத்தளத்தில் ரூ. 14.31 கோடியில் - "முதல்வர் திருமண மாளிகை"

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

### 10 ஜோடிகளுக்கு திருமணம் நடத்தி வைத்து – சீர்வரிசைப் பொருட்கள் வழங்கினார்!

**சென்னை, பிப்.25**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.2.2026) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் திரு. வி.க. நகர் சட்டமன்ற தொகுதி, புரசைவாக்கம், கான்ரான் ஸ்மித் சாலையில் 10.89 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நவீன சலவை நிலையம் மற்றும் 12.68 கோடி ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ள கன்னிகாபுரம் விளையாட்டுத் திடல் மற்றும் இராயபுரம் சட்டமன்ற தொகுதி, மூலகொத்தளத்தில் 14.31 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் திருமண மாளிகையைத் திறந்து வைத்து, 10 ஜோடிகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து சீர்வரிசைப் பொருட்களை வழங்கி மணமக்களை வாழ்த்தினார்.**

**புரசைவாக்கம், கான்ரான் ஸ்மித் சாலை நவீன சலவை நிலையம்:**

புரசைவாக்கம் நவீன சலவை நிலையமானது தரைதளம் மற்றும் முதல் தளங்களுடன் மொத்தம் 60 எண்ணிக்கையிலான சலவை நிலையம் அதில் 30 எண்ணிக்கையிலான சலவை இயந்திரங்கள் (Washing Machines), 30 எண்ணிக்கையிலான சலவை கற்கள் (Washing Stones) மற்றும் 6 எண்ணிக்கையிலான உலர்வை இயந்திரங்கள் (Dryers), 60 எண்ணிக்கையிலான சேமிப்பு அறைகள் (Store Rooms) மற்றும் நவீன கழிப்பறை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

**கன்னிகாபுரம் விளையாட்டுத் திடல்:**

3.75 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட கன்னிகாபுரம் விளையாட்டுத் திடலில் 14,708 சதுர அடி கட்டடப் பரப்பளவில் தரைதளம் மற்றும் இரண்டு தளங்களுடன் உள்விளையாட்டு அரங்கம் கட்டப்பட்டுள்ளது. தரைத்தளத்தில், இறகு பந்து கூடம் மற்றும் உடற்பயிற்சி கூடமும், முதல் தளத்தில் டேபிள் டென்னிஸ், சதுரங்க விளையாட்டு, கேரம் விளையாட்டு பகுதியும், இரண்டாம் தளத்தில் குத்துச்சண்டை வளையம் போன்ற உட்புற விளையாட்டு அரங்கம் ஆகியவை அதிநவன வசதியுடன் கட்டப்பட்டுள்ளன.

கன்னிகாபுரம் விளையாட்டுத் திடலில் கால்பந்து மைதானம், 280 நபர்கள் அமரக்கூடிய வகையில் 2 பார்வையாளர்கள் மாடம், சிலம்பம் மைதானம், கபடி மைதானம், குழந்தைகள் விளையாட்டுப் பகுதி, 3 மீட்டர் அகல நடைபாதை, அக்குபஞ்சர் நடைபாதை, வெளிப்புற உடற்பயிற்சி உபகரணங்கள், குடிநீர் வசதிகள், வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் நவீன கழிப்பறை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. வடசென்னை பகுதியின் பழமையான விளையாட்டு திடல் திராவிட மாடல் ஆட்சியில் மேம்படுத்தி பல்வேறு விளையாட்டு வசதிகளுடனும், சிறப்பம்சங்களுடனும் அமைக்கப்பட்டுள்ளது.

**இராயபுரம் முதல்வர் திருமண மாளிகை:**

இராயபுரம் முதல்வர் திருமண மாளிகையானது 0.67 ஏக்கர் மொத்த நிலப்பரப்பில் 43,881 சதுர அடி கட்டடப் பரப்பளவில் அடித்தளம், தரைதளம் மற்றும் இரண்டு தளங்களுடன் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ளது. இத்திருமண மாளிகையில் 55 எண்ணிக்கையிலான 4 சக்கர வாகனம் நிறுத்தும் வசதிகளும், 60 எண்ணிக்கையிலான 2 சக்கர வாகனம் நிறுத்தும் வசதிகளும், சமையலறை கூடமும், 20 எண்ணிக்கையிலான நவீன கழிப்பறை வசதிகளும், 2 எண்ணிக்கையிலான மின்தூக்கி வசதிகளும், 750 இருக்கை வசதிகளுடன் கூடிய திருமண மண்டபமும், ஒரே சமயத்தில் 175 நபர்கள் அமர்ந்து உணவு அருந்தும் வகையில் உணவுக்கூடமும் மற்றும் 12 எண்ணிக்கையிலான தங்கும் அறைகளுடன் கட்டப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சிகளில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, ஆர்.டி.சேகர், அ.வெற்றி அழகன், ஜெ.ஜெ.எபிநேசர், ஆர். மூர்த்தி, ஜோசப் சாமுவேல், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், நிலைக்குழுத் தலைவர் (நகரமைப்பு) தா.இளைய அருணா, மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர். கௌஷிக், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத்தலைவர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சட்டமன்றத் தேர்தல் :

# 5வது நாளாக தி.மு.க. விருப்ப மனு விநியோகம்!

## சென்னை – அண்ணா அறிவாலயத்தில் ஏராளமான கழகத்தினர் குவிந்தனர்!









சென்னை, பிப். 25–

சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடுபவர்களுக்கான விருப்ப மனு விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20.2.2026 அன்று தொடங்கியது.

ஐந்தாவது நாளாக 24.2.2026 அன்று கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் ஆர்வமுடன் விருப்ப மனுக்களைப் பெற்றனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையில் மெகா கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டணியில் புதிதாக தே.மு.தி.க. இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து கூட்டணி கட்சிகளுடன் தி.மு.க. தொகுதிப் பங்கீடு குறித்து அதிகாரப்பூர்வ பேச்சுவார்த்தையை தொடங்கி உள்ளது.

இந்த நிலையில் தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புகிறவர்களிடம் இருந்து விருப்ப மனுக்கள் விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20ஆம் தேதி அன்று தொடங்கியது.

24.2.2026 5வது நாளாக அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனுக்களை தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன் ஆகியோர் பெற்றனர். அப்போது கழகத்தினர் ஏராளமானோர் விருப்ப மனுக்களை அளித்தனர்.

தற்போது விருப்ப மனுக்களைப் பொறுத்த வரையில் 234 தொகுதி களுக்கும் பெறப்படுகிறது.

இதே போன்று, தமிழ்நாடு முழு வதும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக வந்து திரண்டு விருப்ப மனுக்களை வாங்கிச் செல்கின்றனர். ஏராளமானோர் பூர்த்தி செய்த விருப்ப மனுக்களையும் தாக்கல் செய்தனர். விருப்ப மனு விநியோகம் வருகிற மார்ச் 2ஆம் தேதி வரை நடைபெறுகிறது.